# வெற்றிட அறிவித்தல்

## மத்திய மாகாண அரச சேவையில் நிலவும் வெற்றிடங்கள்
## மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு

மத்திய மாகாண சபையில் கீழ்வரும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தற்போது அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையிலுள்ள குறித்த பதவிற்கு உரித்தான சேவையில் இருக்கும் தகைமைகளையுடைய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01.** வெற்றிடம் நிலவும் பதவிகள்

| தொடர் இல. | பதவிகள் | உரிய சேவையும் தரமும் | தகைமைகள் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | மத்திய மாகாண பிரதான செயலாளர் காரியாலயத்தின் பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்)* | இலங்கை திட்டமிடல் சேவை விசேட தரம் | இலங்கை திட்டமிடல் சேவை விசேட தரத்திலுள்ள உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும். இலங்கையில் செயற்படுத்தப்படும் வெளிநாட்டு முதலீட்டு கருத்திட்டங்களில் வேலை செய்த அனுபவம் மற்றும் ஆங்கில மொழியாற்றல் என்பன மேலதிக தகுதியாக கொள்ளப்படும். (தகுதிபெற்ற விசேட தர உத்தியோகத்தர்கள் இல்லாதவிடத்து தரம் **I** இலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படும். | 01 |
| 2 | மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் தறை சார் நிபுணர் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தரம் **I** | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தரம் **I** இலுள்ள உத்தியோகத்தராக இருத்தல் | 01 |
| 3 | மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தரம் **II** | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தரம் **II** இலுள்ள உத்தியோகத்தராக இருத்தல் | 01 |
| 4 | மத்திய மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் உதவி/ பிரதிப் பணிப்பாளர் | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தரம் **II/III** | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை தரம் **II/ III** இலுள்ள உத்தியோகத்தராக இருத்தல் | 03 |

## 02. ஆட்சேர்ப்பு முறை

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உரிய சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுள், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றினால் நடாத்தப்படும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் திறமை வரிசையின் அடிப்படையில் இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படும். தனது துறை சார்ந்த பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது அதியுயர் தகுதி பெற்றிருத்தல், சேவைக் காலம், துறை சார் அறிவு, நிருவாகத் திறன் மற்றும் கல்வித் தகைமைகள் என்பன நேர்முகப் பரீட்சையின் போது கவனத்திற் கொள்ளப்படும்.

* இப்பதவி 2015-12-31ஆம் திகதி முதல் வெற்றிடமாகவுள்ள பதவியாகும்

## 03. தகைமைகள்

1. 2015.12.10 ஆம் திகதியன்று உரிய சேவையில் குறைந்த பட்சம் 10 வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்
2. தற்போது அரச சேவையில் மற்றும் மாகாண அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடம் இருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுவதால் வயது எல்லை ஏற்புடையதன்று
3. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

குறிப்பு : - தகைமைகளை உறுதிப்படுத்தும் அனைத்து சான்றிதழ்களின் பிரதிகளுடன், தேசிய ஆளடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வெண்டும்

## 04. விண்ணப்பிக்கும் முறை

முறையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2015-12-10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக் கூடிய வகையில் திணைக்களத் தலைவர் மற்றும் உரிய அமைச்சின் செயலாளரினூடாக "செயலாளர், மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு, இல. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (மத்திய மாகாண சபையிற்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தராயின் தனது விண்ணப்பத்தை மாகாண அமைச்சுச் செயலாளர் மற்றும் பிரதான செயலாளர் ஆகியோரின் விதந்துரையுடன் அனுப்புதல் வேண்டும்). விண்ணப்பத்தினை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"........................ பதவிக்கு விண்ணப்பம் கோரல்"** என தெளிவாக குறிப்பிடல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் தனது விண்ணப்பங்களை வெவ்வேறாக அனுப்புதல் வேண்டும். குறிப்பிட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்திராத, விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் மற்றும் குறிப்பிட்ட மாதிரிக்கு புறம்பாகவும் பூரணமின்றியும் கிடைக்கும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தாமதமாக கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் தொலைந்த விண்ணப்பங்கள் பற்றிய முறைபாடுகளை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. மாதிரி விண்ணப்பப்படிவத்தை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் (www.psc.cp.gov.lk) பெற்றுக்கொள்ளலாம்.

ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இங்கு குறிப்பிடாத ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண கௌரவ ஆளுனரிற்குறியதாகும்.

கை/இ: ஆர். எம். என். ரத்நாயக்க
செயலாளர்
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு
மத்திய மாகாண சபை

2015 நவம்பர் மாதம் 23 ஆம் திகதி
மத்திய மாகாண சபையின்
அரச சேவைகள் ஆணைக்குழுவில்.